தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 24, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 செப்டம்பர் 9, வியாழக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> *"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா*
> *மான முடைய தரசு."*

அறநெறி தவறாமலும், குற்றமேதும் இழைக்காமலும், வீரத்துடனும், மானத்துடனும் ஆட்சி நடத்துபவர்களே சிறந்தவர்களாவார்கள்.

1. இரங்கல் தீர்மானம்

கவிஞர் புலமைப்பித்தன் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கல் தீர்மானம். கவிஞர் புலமைப்பித்தன் அவர்கள் மறைவு குறித்து. கவிஞர் புலமைப்பித்தன் அவர்கள் 8–9–2021 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. திராவிடக் கொள்கைகளில் பற்று கொண்ட புலவர் புலமைப்பித்தன் அவர்கள் 1980–1983 ஆம் ஆண்டுகளில் தமிழக சட்ட மேலவைத் துணைத் தலைவராக சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள். மேலும், தமிழ்நாடு அரசின் பெரியார் விருதினைப் பெற்ற பெருமைக்குரியவர். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், திரையுலக நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும்*

தெரிவித்துக்கொள்கிறது. இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *ஜெயக்குமார், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***1451—திரு. S. ஜெயக்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை விரைந்து முடித்து, குடிநீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 2 பேரூராட்சிகள் குன்னத்தூர் மற்றும் ஊத்துக்குளி, ஈரோடு மாவட்டம், பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 6 பேரூராட்சிகளான, பெருந்துறை, கருமாண்டிசெல்லிபாளையம், காஞ்சிகோவில், நல்லாம்பட்டி, பள்ளப்பாளையம் மற்றும்